24th January 1964]

திரு. கே. ராமதாஸ் : சென்னை நகரத்தின் பகுதிகளில் அப்படி இருப்பதால் நகரசபைக்குத் தெரிவித்து அவை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால் அவற்றை அகற்ற சர்க்கார் லைசன்ஸ் ஏற்படுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ் தருவது என்பதில்லை. அந்தந்த ஸ்சாபனத்திற்கு பொறுப்பிருக்கிறது. விரும்பினால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : சாதாரணமாக பொதுமக்கள் கலியாணம் போன்ற விசேஷ காரியங்களைச் செய்யும்போது முனிசிபாலிடிகளுக்கு வாடகை கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறார்கள். அதைப்போல எந்த கட்சியாக இருந்தாலும் அவர்களும் இதுபோல கொடி போடவேண்டுமென்றால் வாடகை கொடுக்கவேண்டுமென்று சட்டத்தை முனிசிபாலிடிகளுக்கும் கார்ப்பரேஷனுக்கும் அரசாங்கம் போடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதிருக்கிற விதிகளின்படி அவர்கள் அனுமதி வாங்கித்தான் போடவேண்டுமென்று இருக்கிறது. விதிகளின்படி அவர்கள் செய்யவில்லையென்றால் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு அந்தந்த ஸ்தாபனத்தைப் பொறுத்தது என்று சொன்னேன்.

Merit scholarships

* 42 *Q.*—SRI M. SUBBIAH CHETTIAR (on behalf of SRI K. S. ABDUL WAHAB) : Will the Hon. the Chief Minister be pleased to state the number of merit scholarships given by the State Goverment to students in the State during 1962–63?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister) : 2,658.

Burma rice

* 43 *Q.*—SRI M. SUBBIAH CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the agencies through which Burma rice is distributed to the fair price shops;

(*b*) whether it is a fact that Burma rice distributed to the fair price shops is being exported to Kerala State; and

(*c*) if so, the action taken or proposed to be taken in this regard?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Minister for Food) : (*a*) By the Central Government through the Regional Director (Food), Madras.

(*b*) & (*c*) The matter is under investigation.

[24th January 1964

திரு. எம். சுப்பையா செட்டியார் : இது ஜனங்களுக்கு யார் வினியோகம் செய்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புரக்யூர்மெண்ட் செய்ய மத்திய ரீஜினல் டைரக்டரிடத்தில் கொடுத்துவிடுகிறோம்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : பர்மா அரிசியைப் பற்றி கேட்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பர்மா அரிசி ஆங்காங்குள்ள நமது நியாய விலைக்கடைகள் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார் : நியாயவிலைக் கடைகள் என்பது கூட்டுறவு ஸ்தாபனமா? இதர வியாபாரிகளும் செய்துவருகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாரும் செய்கிறார்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : இதுவரையில் பர்மா அரிசி நியாயவிலைக் கடைகளில் வினியோகம் செய்யப்படாமல் வெளியே தவறாக விற்கப்படுவதைக் கண்டுபிடித்து அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் இன்வெஸ்டிகேஷனில் இருப்பதாகச் சொன்னேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : ஒரு வருஷமாகிவிட்டது. இன்னும் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்றால் எப்போது தான் முடிவு ஏற்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சுலபமாக கண்டுபிடிக்கக் கூடிய குற்றங்களாக இருந்தால் சீக்கிரம் கண்டுபிடிக்க முடிகிறது. இந்தக் குற்றத்தில் நாம் வினியோகம் செய்யும் அரிசி யாரிடத்திலிருந்து வந்தது என்று தெரியவில்லை. அது ராஜ்யத்திற்கு வெளியே இருக்கிற கன்சைனீ பேருக்கு அனுப்பப்பட்டது. விஷயம் தெரிந்த பிறகு இடையிலே அதை மறித்து நிறுத்தப்பட்டது. யார் அனுப்பினார்கள், எப்படி வந்தது என்பது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது 5—6—1963-ல் தான் இந்த புகார் எடுத்துக்கொள்ளப்பட்டது. அது இப்போது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது.

* 44 *Q.*—Dr. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there was any seizure of Burma rice in the City of Madras recently; and

(*b*) if so, how the persons concerned were able to procure it?

The Hon. Sri R. VENKATARAMAN (on behalf of the Hon the Minister for Food) : (*a*) Yes.

(*b*) The matter is under investigation.